★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 5உ வெள்ளி (18–5–56) ★ ★ வெளியூர்: வைகாசி 6உ சனி (19—5—56) [இதழ் 288

சென்னை லுங்கிகட்கு அமெரிக்காவில் வரவேற்பு!

புதுடில்லி, மே 17—

சென்னை மாநிலத்தில் தயாராகும் கைத்தறி லுங்கிகள் அமெரிக்காவில் பெரிதும் விரும்பப்படுகின்றன. இதை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள லுங்கிகளின் எண்ணிக்கையைக் கொண்டு அறியலாம்.

இத்தகவலை இன்று மக்கள் சபையில் தொழில் மந்திரி அறிவித்தார்.

'நன்மை' தினையளவு! 'கொடுமை' பனையளவு!

*********-*-*********

இசைப் பெரும் புலவர் நாதசுர கானம்

மாநாட்டில் நாள்தோறும் உண்டு

திருச்சி, மே 18—

இசைப் பெரும்புலவர் திருவாவடுதுறை இராசரத்தினம் அவர்கள் மாநாட்டில், நேற்றும் இன்றும் நாதசுர இன்னிசை வழங்கியது போலவே சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரண்டு நாட்களிலும் கூட நாதசுர இசை வழங்கி மாநாட்டில் கலந்து கொண்டவர்களை இன்பக் கடலில் ஆழ்த்துவார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

*-*****************-*

'காங். ஆட்சியில் ஏற்பட்ட இலாப-நஷ்டம் இவைகளே'

'மக்கள் சிந்திக்கத் தலைப்பட்டனர்—நம்மைக் குறை கூறித் திரிய முனைந்தனர் ஆட்சியில் இருப்போர்'

மாநில மாநாட்டுத் திறப்பு விழாவில் ஜி. பி. சோமசுந்தரம் கருத்துரை

"அடுத்துவர இருக்கும் பொதுத்தேர்தலில் நாம் எங்கு கலந்து கொண்டு விடுகிறோமோ என்னும் அச்சம், குறிப்பாக காங்கிரஸ் வாதிகளை மிகமிக அல்லல்படுத்தி வருகிறது. சென்ற ஒன்பதாண்டு காலமாக காங்கிரஸ் அரசாங்கத்தினால் நாடு அடைந்துள்ள இலாப நஷ்டங்களை மக்கள் செவ்வனே சிந்தித்துப் பார்க்கத் தலைப்பட்டு விட்டனர். காங்கிரஸ் ஆட்சியில் மக்களுக்கு ஏற்பட்ட நன்மைகள் எவை எவை என்று எடுத்துக் கூறிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை. அவர்கள் செய்த நன்மை தினைஅளவு; செய்த கொடுமைகள் பனையளவு—சுருங்கக்கூறின், ஒரு கூடை கல்லும் பிடாரி!

"இந்த நிலையில் மீண்டும் காங்கிரசே ஆட்சிக்கு வருவதால் நாடு எப்படி நன்மை பெற முடியும் என்று மக்கள் சிந்திக்கத் துவக்கி விட்டனர்; இந்த சிந்தனை காங்கிரஸ் ஆளவந்தார்களின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறது; ஆகவே, இன்றையக் காங்கிரஸ்காரர்கள் போகுமிடமனைத்திலும் நம்மை—திராவிட முன்னேற்றக் கழகத்தினரை தாக்குவதையே தங்கள் பிரச்சாரமாக வைத்துக்கொண்டிருக்கின்றனர்.

"எனவே, நாட்டின் நலனை முன்னிட்டு திராவிடநாடு தனி நாடாவதற்கும், சமதர்மத்தை நிலைநாட்டவும் முதற்படியாகப் பங்கு பெறுவதற்கு, வரப்போகும் பொதுத் தேர்தலில் கலந்துகொள்வது மக்களின் கருத்தறிந்து நடக்க வேண்டிய சூழ்நிலையிலிருக்கிறோம்."

இவ்வாறு, தி. மு. க. மாநில மாநாட்டுத் திறப்பாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டுவிட்டு, தொடர்ந்து பேசினார்:—

"நம்முடைய கழகம் துவங்கி ஏறக்குறைய ஏழு ஆண்டுகளாகி விட்டன. தாய்க் கழகத்திலிருந்து பணியாற்றிவந்த நாமெல்லோரும், தனிக் கழகம் துவக்கி நடத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்ட நிலைமைகளைப் பற்றி இப்போது நாம் ஆராய்ந்துகொண்டிருக்க வேண்டிய அவசியமும் இல்லை; அதற்கு நேரமுமில்லை, நமக்கு.

"கழகம் துவங்கிய உடன் நம்மைப் பற்றி இந்நாட்டில் பல்வகைப் பட்ட ஆருடங்கள் கூறப்பட்டன.

(4-ம் பக்கம் பார்க்க)

தி.மு.க. மாணவர் மாநில மாநாடு

கோவையில் நடைபெறும்

இவ்வாண்டு ஜூலைத் திங்களில் கோயம்புத்தூரில் திராவிட முன்னேற்றக் கழக மாணவர் மாநில மாநாடு நடைபெறும். அதற்கு கோவைச் செழியன் வரவேற்புக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். பிற விவரங்கள் விரைவில் வெளிவரும்.

மாநில மாநாடு 2-வது நாள்:

ஆயிரக்கணக்கில் தாய்மார்கள் திரண்டிருந்தனர்

லட்சத்திற்கு மேற்பட்ட தோழர்கள் குழுமியிருந்தனர்

'பொறுத்தது போதும்—செயலாற்ற முனைவோம்'

அன்பில் தர்மலிங்கம் அன்பழைப்பு

திருச்சி, மே 18—

இன்று வள்ளுவர் நகரில், வானோங்கி விளங்கும் மாநாட்டுப் பந்தலில், 2-ம் நாள் நிகழ்ச்சியைக் காண்பதற்குக் காலை 6-மணியிலிருந்தே மக்கள் திரள் திரளாக—குடும்பம் குடும்பமாகக் குழுமியவண்ணமிருந்தனர்.

காலை 9-மணிக்கெல்லாம் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் மாநாட்டுப் பந்தலில் குழுமிவிட்டனர். இன்று மேலும் ஏறக்குறைய 500 பிரதிநிதிகள் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்து கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாநாட்டுப் பந்தலில் தாய்மார்கள் ஆயிரக்கணக்கில் குழுமியிருந்தனர். எங்கு பார்த்தாலும் பச்சிளங் குழந்தைகளைத் தாங்கிய 'ஏனை'கள் ஆடிக்கொண்டிருந்த காட்சி கண்ணுக்குப் பெருவிருந்தாக இருந்தது.

சுமார் 9-30 மணியளவில், இசைமுரசு நாகூர்-அனிபா அவர்கள், இசை விருந்து அளித்தார்.

பின்னர், இசைச் செல்வி ஜி கஸ்தூரி குயிலிசை வழங்கினார்.

இசை அரங்கு முடிவுற்றவுடன் தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் அ. பெ. தருமலிங்கம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்திருந்த ஆயிரக்கணக்கான பிரதிநிதிகளையும், தி. மு. கழக உறுப்பினர்களையும் உறுப்பினரல்லாதார்களையும், கழக முன்னணி வீரர்கள் ஆகிய அனைவரையும் வரவேற்று அழகியதொரு சொற்பொழிவாற்றினார்.

அவர், வரும் பொதுத் தேர்தல்களில் தி. மு. க. போட்டியிடலாமா, கூடாதா என்பது பற்றிய பொதுமக்களின் எண்ணத்தை அறிவதற்கு மாநாட்டில் வாக்கெடுப்பு எடுக்கப்படப் போவதைப் பற்றிக் குறிப்பிட்டு, ஒதுங்கி நின்று இருப்பதால் நம் இலட்சியத்தை விரைவில் அடைய முடியாதென்றும், பொறுத்துக் கொண்டிருந்ததெல்லாம் போதுமென்றும், இனிச் செயலாற்றச் சனநாயக அடிப்படையில் இறங்குவதானால் தேர்தலில் கலந்துகொள்வதுதான் முறையென்றும், எனவே மாநாட்டிற்கு வந்துள்ள மக்கள் தம் கருத்தை ஒளிக்காமல் கூறிவிட வேண்டுமென்றும் மிக உருக்கமாகப் பேசினார்.

அதன் பின்னர் 12-30 மணிக்குத் தோழர் ஜி.பி. சோமசுந்தரம் அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்து அரியதொரு சொற்பொழிவாற்றினார்.

உங்களுக்குத் தெரியுமா?

நியூயார்க், மே 17—

இயற்கையாக குழந்தைகள் பிறப்பதைவிட கருச் சிதைவுகளை மேற்கொண்டோர் பிரான்சில் அதிகமாம்!

அமெரிக்காவில், கருச்சிதைவுகள் தடை செய்யப்பட்டிருந்தும்கூட ஆண்டுதோறும் 7 இலட்சத்திலிருந்து 20 இலட்சம்வரை கருச்சிதைவுகளை அங்குள்ளோர் மேற்கொள்கின்றனராம்!

கண்காட்சித் திறப்பு விழா

மக்கள் நலனுக்குப் பாடுபட்ட மேதைகளின் உருவப் படங்கள் இடம் பெற்றுள்ளன

ஓவியக் கலையின் சிறப்புப் பற்றி என். வி. நடராசன் கருத்துரை

17—5—56 மாலை 5-மணியளவில், தி. மு. க. 2-வது மாநில மாநாட்டையொட்டி நடைபெறும் ஓவியக் கண்காட்சியைத் திறந்து வைத்துத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது:—

"நமது தோழர்களின் திறமை எத்தகையது என்பதை நமது கண்காட்சிசாலை காட்டுவதாகும்.

"நமது தோழர்கள் ஓவியம் தீட்டுவதில் எத்தனை ஆற்றல் கொண்டவர்கள் என்பதை மட்டுமின்றி, நாட்டு மக்களுக்கு நல்லறிவு ஊட்டுவதற்கு உதவக்கூடியதாகவும் கண்காட்சி அமைந்திருக்கிறது.

"நமது கண்காட்சி, வேறு பல கட்சிகள் நடத்தக்கூடியதைப் போன்றவை அல்ல; நாட்டு மக்களுடைய மூடத்தனத்தைப் போக்கக்கூடியதாக நமது ஓவியக் கண்காட்சி அமைந்திருக்கிறது.

"இதுபோன்ற ஓவியக் கலைமட்டுமின்றி, பொதுவாகவே எல்லாக் கலைகளும் நாட்டு மக்களுக்கு நல்லறிவு ஊட்டக்கூடியனவாக மாற்றப்படுவதற்கு நம் அண்ணா அவர்கள் தான் காரணம் என்பதை எல்லோரும் ஒப்புவார்கள்.

ஓவியக் காட்சி சாலையில், பல நாட்டு மக்களுக்கும் பாடுபட்ட மாவீரர்கள்—உத்தமர்கள்—அறிஞர்கள் ஆகியோரின் படங்களை—உருவப் படங்களைக் காணமுடியும். அதுபோன்றே, இங்குள்ள இதரப் படங்கள், ஒவ்வொன்றும், ஒவ்வொரு வகையான அறிவு புகட்டக் கூடியனவாக அமைந்திருப்பதை நீங்கள் காணமுடியும்.

"இங்கு ஒரு விநோதமான விஞ்ஞானக் காட்சி சாலையும் அமைக்கப்பட்டிருக்கிறது. நமது கழக மாணவர்கள், இந்தச் சிறந்த ஏற்பாட்டினைச் செய்திருக்கிறார்கள். இங்குள்ள விஞ்ஞானக் காட்சி, சாதாரணமாக நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய பொதுஅறிவு பற்றிய விவகாரங்களை உங்களுக்குச் சொல்லிக் கொடுக்கும்.

"ஆகவே, நீங்கள் வேறெந்த விதமான கண்காட்சிகளைக் காண்பதைவிட, இங்கே காணும் கண்காட்சி, உங்களுக்கு நல்லறிவு ஊட்டத்தக்கதாகும்; பல அரிய விஷயங்களைச் சொல்லித் தரத்தக்கதாயிருக்கிறது என்பதையும் உணர்ந்து, பெருவாரியாக இங்கு சென்று காட்சியைக் கண்டு பயன் பெறவேண்டும் என்று கூறி இந்தக் கண்காட்சியைத் திறந்து வைக்கிறேன்."

துவக்கத்தில் தோழர் கே. வி. முருகேசன் இயக்கப் பாடல்கள் பாடினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

சென்னை 18—5—'56 வெள்ளி

வெண்ணெய் வைத்துக் கொக்கு பிடிக்கும் வீரர்!

அண்மையில் நாட்டு மக்கள் இரயில் வண்டிப் பிரயாணம் செய்வது மிகுந்துவிட்டது. இப்போது ஒவ்வொரு வண்டியிலும் மக்கள் நெருக்கம் மிகுதியாயிருக்கிறது. இந்த நெருக்கத்தைக் குறைக்க வேண்டுமானால், அதற்கு என்ன வழி செய்வது? இரயில் வண்டித் தொடர்களைப் பெருக்கி, இன்னும் பல புதிய வண்டிகளை ஓடச் செய்வதல்லவா நல்ல முறை? ஆளவந்தோர் இவ்வாறு வண்டிகளை மிகுதிப்படுத்தி, அதன் மூலம் மக்கள் நெருக்கமில்லாமல் பிரயாணம் செய்வதற்கான வசதிகளையல்லவோ செய்து தரவேண்டும்?

ஆனால், இந்திய நாட்டுப் பிரதம அமைச்சர் நேருவின் மூளையில் தோன்றிய வழியைப் பாருங்கள்:

"இரயில் வண்டிகளில் மக்கள் கூட்டம் மிகுகின்றது என்பதன் பொருள், மக்கள் அடிக்கடிப் பிரயாணம் செய்து கொண்டிருக்கின்றனர் என்பதேயாகும். அடிக்கடிப் பிரயாணம் செய்வதற்கு முடியாதபடி மக்களைத் தடுத்துவிட்டால் நெருக்கடி தானாகக் குறைந்துவிடுகிறது."

இதுதான் நேரு கூறும் வழி. இந்த வழியை அவர் தம்முடைய அமெரிக்கத் தோழராகிய புரொபசர் கால் பிரெய்தி என்பாரிடமிருந்து கற்றுக்கொண்டார். பிரயாணம் செய்யாமல் மக்களைத் தடுக்க, நேருவும் அவருடைய அமெரிக்கத் தோழரும் கூறும் முறைகளைப் பாருங்கள்!

"திடீரென்று கோடிக்கணக்கான மக்கள் பிரயாணம் செய்ய விரும்பினால் அதை ஒரே நாளில் சமாளித்துவிட முடியாது. மக்களிடைப் பிரயாணம் செய்யும் வழக்கம் பெருகிவிட்டது. இதனை நிறுத்த இரயில் வண்டியில் பிரயாணம் செய்ய விழைபவர்கள் முன்கூட்டி அறிவித்து அனுமதி ('பர்மிட்') பெற்றுகவேண்டும் என்று கட்டுப்படுத்தலாமெனில், இத்தகைய கட்டுப்பாடு விரும்பத்தக்கதன்று. எனவே, இரயில் வண்டிப் பிரயாணக் கட்டணங்களை உயர்த்திவிட வேண்டும். இரயில் வண்டிப் பிரயாணச் சலுகைகள் அனைத்தையும் நீக்கிவிட வேண்டும். பிரயாணம் செய்பவர்களுக்கு வசதியில்லா நேரங்களில் வண்டிகளைப் புறப்படச் செய்ய வேண்டும்."

இரயில் வண்டிகளில் மக்கள் நெருக்கடியைக் குறைக்க வேண்டி இத்தகைய அரிய ஆலோசனைகளைக் கேட்டுவைத்தும் கட்டணங்களை உயர்த்த வழிசெய்யுமாறு மக்கள்சபையினருக்கு எடுத்துக்கூறும் அளவிற்கு அறிவுத் திறன் பெற்றுள்ள நம் பிரதம அமைச்சர் நேரு, திருவிழாக்களுக்கும், புண்ணிய ஸ்தலங்களுக்கும், தீர்த்த யாத்திரைகட்கும் சென்று செய்த பாவங்களைக் கழுவிவிட்டுப் புதிய பாவங்களைச் செய்வதற்குத் தயாராகுமாறு சொல்லாவிடினும், மோட்ச வழியைப் பெற்றுக் கொள்வதற்கு முயலுமாறு மக்களைத் தூண்டிப் பிரசாரம் செய்வதற்கு இரயில்வே பணத்தைச் செலவிட்டுக் கொண்டிருப்பது எதற்கு என்பதைப் பற்றிச் சிந்திக்கவில்லை.

நாள் தவறாமல், இந்தியப் பத்திரிகைகளில், இத்தகைய பிரச்சார விளம்பரங்கள் வெளிவந்தவண்ணமிருக்கின்றன. அழகிய பல வண்ணங்களில் அச்சிட்ட சுவரொட்டி விளம்பரங்கள் ஆங்காங்கே ஒட்டப்படுகின்றன. 'ஸ்ரீ வீர வேங்கட சத்ய நாராயண சுவாமியை, பிரம்மோற்சவம் நடைபெறும் இந்தச் சமயத்தில் தரிசிக்கும் வாய்ப்பைக் கைவிட்டுவிடாதீர்கள்'—என்றெல்லாம் விளம்பரங்கள் செய்வதிலும், எந்தெந்த ஊரில் என்னென்ன திருவிழா எவ்வெப்போது நடைபெறும் என்பவற்றையெல்லாம மிகமிக அக்கறையாகக் கவனித்து, அப்போதைக்கப்போது, அந்தந்த ஸ்தல மகாத்மியங்களைப் பற்றியும், தீர்த்த விசேடங்களைப் பற்றியும், மூர்த்தியின் பெருமைகளைப் பற்றியும் மக்களுக்கு எடுத்துக்கூறி, மக்களின் மனதில் மதப் பண்பு மாறாமல், குறையாமல் இருக்குமாறு கவனித்துக்கொள்ளும வேலையைப் பொறுப்புடன் நிறைவேற்றிவருவதிலும் மதச்சார்பற்ற நம் அரசாங்கம் எவ்வளவு கடமையை உணர்ந்து வேலை செய்துவருகிறது! இதற்காகச் செலவிடப்படும் தொகை எத்தனை கோடி! இத்துறையில் விடப்படும் தனி இரயில் வண்டிகள் எத்தனை? இவ்வாறு ஒரே இடத்தில் மக்கள் கூட்டம் குழுமுவதால், உண்டாகும் நோய்ப் பெருக்கங்கள், உயிர்ச்சேதங்கள் போன்ற தொல்லைகள் எத்துணை?

இவற்றையெல்லாம் நிறுத்தி, பிரயாணம் செய்யும் மக்களுக்கு இன்னும் பல வண்டிகளைவிட ஏற்பாடு செய்தும், இப்போதுள்ள கட்டணத்தைக் குறைத்து, மக்களைப் பிரயாணம் செய்யத் தூண்டியும், மக்களுக்கு வசதியான நேரங்களில் வண்டிகளைவிட்டும், மக்கள் நலன் கருதிச் செயலாற்றுமல், திருவிழாக்களுக்குப் போகத் தூண்டும் பிரசாரத்திற்காகக் கோடிகணக்கில் பணம் செலவிடுவதும், அதே நேரத்தில் பிரயாணம் செய்யும் தேவையுள்ள மக்களின் பிரயாணத்தைத் தடை செய்யத் திட்டம் வகுப்பதுமாக ஓர் அரசாங்கப் பிரதமர் வேலை செய்கிறார் என்றால், அவர் திறனை எதற்கொப்பிடுவது?

ஏழைமக்கள் நிறைந்த நம் நாட்டில் மக்கள் பிரயாணம் செய்ய, இப்போதுள்ள கட்டணமே மிக அதிகமான தாகும். இந்நிலையில் கட்டணத்தை இன்னும் உயர்த்துவதென்பது அறிவுடைய செயலாகாது.

மேலும், கட்டண உயர்வால் பாதிக்கப்படுபவர்கள் ஏழைகளே. எனவே, ஏழை மக்களுக்கு இன்னலைப் பெருக்கும் துறையில்தான் நம் பிரதம அமைச்சரின் மூளை வேலை செய்கிறதே ஒழிய, நாட்டின் நன்மை, நாட்டு மக்களின் நலன் என்பவை அவருடைய கவனத்தில் வரவேயில்லை.

எனவேதான், இத்தகைய மனப்போக்குள்ள பிரதமரின் ஆட்சி ஏழை மக்களே பெருவாரியாக உள்ள தென்னாட்டவருக்கு நன்மை செய்வதாக இல்லை. தென்னாடு—திராவிடம்—இவர்கள் ஆட்சியில் அலட்சியப்படுத்தப் படுகிறது. இவற்றை யறிந்தே, திராவிட நாடு இவர்கள் பிடிப்பிலிருந்து மீட்சி பெற வேண்டுமென்று நாம் கூறுகிறோம; திராவிட நாடு திராவிடர் ஆட்சியில் வந்தேயாக வேண்டும என்பதை மனத்திற் கொண்டு, திராவிடர் அனைவரும் ஒன்றுபட்டு நின்று போராட முனைந்து திரண்டு வரவேண்டுகிறோம்.

சம்பளக் குறைப்பு கிடையாதாம்!

ஐ. சி. எஸ். அதிகாரிகள் நிலை பற்றி அமைச்சர்

புதுடில்லி, மே 16—

'ஐ. சி. எஸ். அதிகாரிகளின் சம்பளத்தைக் குறைக்கும் யோசனை அரசாங்கத்திற்கு இல்லை' என்று இந்திய அரசாங்க மந்திரி திரு. ததார், மக்கள் சபையில், டாக்டர் ராம்சுபாக் சிங் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

'ரூ 3,000-க்கு மேற்பட்ட சம்பளம வாங்குகிறவர்களுக்கு மந்திரிகள் வாங்கும் அளவுக்குச் சம்பளத்தைக் குறைக்கும் எண்ணமுள்ளதா? என்று கேட்டகேள்விக்குப் பதிலளிக்கையில், அப்படிப்பட்ட எண்ணத்திற்கு அரசியல் அமைப்புச் சட்டம் இடந்தரவில்லை என்றார்.

சுரங்கத் தொழில் பட்டப் படிப்பு

கிண்டியில் கற்பிக்கப்படும்

சென்னை, மே 16—

சென்னை கிண்டியிலுள்ள தொழிலியல் கல்லூரியில் சுரங்கத் தொழில் பட்டப் படிப்பு ஏற்படுத்தப்படும் என்று தெரியவருகிறது.

சுரங்கத் தொழில் பட்டப் படிப்புப் படித்தவர்கள் 3,000 பேரும், அது சம்பந்தமான சாதாரண படிப்புப் படித்தவர்கள் சுமார் 4,500 பேரும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவுக் காலத்தில் தேவைப்படுவர் எனத் தெரிகிறது.

10 கோடி டாலரில்

தொழிலியல் ஆராய்ச்சி நிலையம்

டெட்ராய்ட், மே 17—

அமெரிக்காவின் விஞ்ஞான. எஞ்சினீயரிங் கல்வி, தொழிலியல தலைவர்களில் 5,000-க்கு அதிகமான பேர் கலந்து கொள்ளும் மாபெரும் தொழிலியல் ஆராய்ச்சி நிலையம், இங்கு கடந்த புதன் கிழமையன்று துவக்கப் பெற்றது

10 கோடி டாலரில் அமைக்கப்படும் இந்நிலையம், 4,000-க்கும் அதிகமான விஞ்ஞானிகளும், எஞ்சினீயர்களும், தொழில் நிலையங்களும், மேம்பட்ட பொருட்களை உற்பத்தி செய்வது பற்றியும் அவைகளைத் தயாரிக்க மேம்பட்ட முறைகளைக் கண்டறியவும் வசதி அளிக்குமாம்!

இரும்பு — எஃகுத் தொழிலாளர்

கூட்டுப் பயிற்சி

ரஷ்யாவுடன் ஒப்பந்தம்

புதுடில்லி, மே 16—

ரஷ்யாவின் ஒத்துழைப்போடு இந்தியாவில் இப்போது கட்டப்பட்டு வருகின்ற இரும்பு - எஃகு உற்பத்தி தொழிற்சாலையில் வேலை செய்வதற்கென்று, ரஷ்யாவில் இந்தியத் தொழிலாளர்களும், நிபுணர்களும் பயிற்சி பெறுவதற்கு இந்தியா ரஷ்யாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் இன்று கையெழுத்தாகியது. மொத்தம் சுமார் 700 பேர் ரஷ்யா சென்று பயிற்சி பெறுவர்.

'அம்பர் சர்க்கா' திட்டத்திற்குப் பேரிடி?

இந்திய சர்க்கார் அழைத்த ஜெர்மன் நிபுணர்கள் எதிர்ப்பு?

சிறிய கிராமங்களுக்கே 'அம்பர் சர்க்கா' ஏற்றதாம்— நகருக்கு அருகிலும் அதைப் பயன்படுத்தக்கூடாதாம்!

புதுடில்லி, மே 16—

இந்திய அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் இந்தியாவுக்கு வந்துள்ளஜெர்மன் நிபுணர்கள் 'அம்பர் சர்க்கா'வைப் பற்றி நல்ல அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை என்று தோன்றுவதாக நம்பத் தகுந்த வட்டாரத்தின் வாயிலாகத் தெரிகிறது.

"அமபர் சர்க்கா' சாதாரண சர்க்காபோன்றே பயனுடையதுதான். ஆனல், அதை நகரங்களுக்கு மிகவும் தொலைவிலுள்ள சிறு சிறு க்ராமங்களில் மாத்திரமே பயன்படுமாறு செய்யலாம்.

நகரங்கள், பொருள்கள் உற்பத்தி செய்யப்படும் இடங்கள், தொழில் புரிவதற்கு வசதியுள்ள இடங்கள் ஆகியவற்றிற்கு அருகாமையில் உள்ள க்ராமங்களில்கூட 'அம்பர் சர்க்கா'வைப் பயன்படுத்தப் படக்கூடாது"

என்று, அந்த ஜெர்மன் குழுவில் ஒருவரும், நெசவுத் தொழில் நிபுணருமான எட்டர் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

இக்காலத்தில் வளர்ச்சி பெற்றிருக்கும் நெசவு இயந்திரங்களின் இடத்தை 'அம்பர் சர்க்கா' வைப் பற்றிக் கொள்ளக்கூடாது என்ற கருத்தையும் அவர் வெளியிட்டுள்ளார்.

சென்ற ஆண்டு இந்தியாவிற்கு வந்துபோன ஜெர்மன் துணைத் தலைவர் செய்த ஏற்பாட்டின்படி மேற்கு ஜெர்மன் அரசாங்கம், ஜெர்மன் இயந்திர உற்பத்தியாளர் சங்கத்தின் பிரதிநிதிகளான மூன்று நிபுணர்களை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தது. அம்மூவரும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் சுமார் ஏழு வாரங்கள் சுற்றிப் பார்த்த பிறகு வியாபாரம் — தொழில் இலாகாவிற்கு சிறு தொழில்கள் குறித்த இரண்டு அறிக்கைகள் ஒப்படைத்துள்ளனர்.

அம்மூன்று நிபுணர்களும் இன்று தொழில் மந்திரியை சந்தித்து அறிக்கைகளில் செய்யப்பட்டுள்ள முக்கிய சிபாரிசுகள் பற்றிவிவாதித்தார்கள்.

ஆப்பிரிக்காவில் மீண்டும் அடிமைகள்

போர்ச்சுகீசியர் ஆட்சிக்குக் கண்டனம்

பம்பாய், மே 17—

ஆப்பிரிக்காவில் போர்ச்சுகீசியர் ஆட்சிக் குட்பட்ட பகுதிகளில் கட்டாயப்படுத்தி வேலைவாங்கும் முறையைக் கடைப்பிடிப்பதன் மூலம் மக்களை அடிமைகளாக்கி வைத்திருப்பதாகவும், கொடுங்கோலாட்சி புரிவதாகவும், ஆப்பிரிக்க மாணவர்கள் வெளிநாடுகளில்வந்து படிப்பதற்கு முடியாத பலவகை இடுக்கண்களைப் புரிவதில், பிரிட்டிஷ், பிரெஞ்சு அரசாங்கங்களும் ஈடுபட்டிருக்கின்றனவென்பதாகவும், பம்பாயில் கூடிய ஆப்பிரிக்க மாணவர் கழக நான்காவது மாநாடு கண்டனம் செய்திருக்கிறது.

நாட்டு விடுதலைக்காக நடைபெற்ற பேச்சுவார்த்தை

முறிந்துபோனது குறித்து முதலமைச்சர் மனவருத்தம்

லண்டன், மே. 16—

'சிங்கப்பூர் சுதந்திரம் குறித்து மீண்டும் கூடிப் பேசுமாறு பிரிட்டனைக் கேட்பேன்' என்று சிங்கப்பூர் பிரதமர் டேவிட் மார்ஷல் அறிவித்துள்ளார். இது சம்பந்தமாக முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

48 வயதுடைய சிங்கப்பூர் பிரதமர், இப்பேச்சுவார்த்தை தோல்வியுற்றது தமக்குப் பெருத்த ஏமாற்றமாகும் என்றும், தாம் சிங்கப்பூர் திரும்பியதும் தமது பிரதமர் பதவியை ராஜினாமா செய்துவிடப் போவதாகவும், தாம் இனிமேல் அரசியல் நடவடிக்கைகளிலிருந்து முற்றிலும் ஓய்வு பெற்றுக்கொள்ளப்போவதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டின் விடுதலைக்காக நடைபெற்ற இப்பேச்சுவார்த்தைகளின் முறிவு கம்யூனிஸ்டுகளுக்குக்கொண்டாட்டமாயிருக்குமென்றும் அவர் குறிப்பிட்டார்.

உயர்வகை உப்பு உற்பத்தி

ஆய்வு நிலையங்கள் அமைக்க முயற்சி

சென்னை, மே 17—

உப்பு உற்பத்தியில் பல புதிய முறைகளைக் கைக்கொண்டு, நல்ல உயர்வகை உப்பு உற்பத்தி செய்வதற்காகச் சென்னை இராச்சியத்தில் 16 ஆய்வுக்கூடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவையின்றி புதியவையாக இன்னும் 9 ஆய்வுக்கூடங்கள் இந்த ஆண்டில் நிறுவப்படுமாம். இதற்கென ரூ. 63,000 செலவாகும் என்று தெரிகிறது.

இவை, சிகாகுளம், விசாகப்பட்டினம், ஓங்கோல், திண்டிவனம், சீர்காழி, நாகப்பட்டினம், தேவகோட்டை, அறந்தாங்கி, ரஜகமங்கலம் முதலியவிடங்களில் அமைக்கப்படும்.

இப்போது தூத்துக்குடியிலும் காக்கிநாடாவிலும் உள்ள ஆய்வுக்கூடங்கள், இவ்வாண்டில் ரூ. 10,000 செலவில் விரிவாக்கப்படுமாம்.

கல்வி பெறும் வசதி

2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெருகுமாம்!

புதுடில்லி, மே 17—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் முடிவடைவதற்குள் 6 முதல் 11 வயதான குழந்தைகள் 100-க்கு 63 பேர் விழுக்காடு கல்விபெற வசதிகள் கிடைத்துவிடும். 11-முதல் 14-வயதுக்குட்பட்ட சிறுவர்கள் 22.5 சதவீதம் கல்விபெற வசதி ஏற்படும் என்று கூறப்படுகிறது.

‘வேற்றுமை’களைப் பத்திரிகைகள் மிகைப்படுத்திக் கூறுகின்றனவாம்!

இந்திய — அமெரிக்க நாடுகளுக்கிடையே பொதுவான நோக்கம் உண்டாம்

அமெரிக்கத் தலைவரைச் சந்தித்த பின்னர் இந்தியத் தொழிலதிபர் விளக்கம் கூறுகிறார்!

வாஷிங்டன், மே 14—

இந்தியத் தொழிலதிபர் திரு. ஜி. டி. பிர்லா இன்று அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவரைக் கண்டு 25 நிமிட நேரம் அமெரிக்கா—இந்தியா உறவு குறித்துப் பேசினாராம்.

இந்தியா—அமெரிக்கா ஆகிய இரண்டு நாடுகளுக்கும் அடிப்படையில் பொதுவான நோக்கம் உண்டு என்றும், இரண்டு நாட்டுப் பத்திரிகைகளும் இரண்டு நாடுகளுக்கும் இடையே வேற்றுமைகளை மிகைப்படுத்திக் கூறியுள்ளன என்றும் அவர் பத்திரிகை நிருபர்களிடம் கூறினாராம்.

தக்க சமயத்தில் இரண்டு நாடுகளுக்குமிடையேயுள்ள எல்லா வகையான வேறுபாடுகளும் நீக்கப்பட்டுவிடும் என்றும், ஜனாதிபதி ஐசனோவர் மிக நட்புரிமையோடு பழகுகிறார் என்றும், ஜூலை மாத வாக்கில் இந்தியப் பிரதமர் நேரு அமெரிக்காவுக்கு வரும்போது, ஜனாதிபதி ஐசனோவரை இந்தியா வரும்படி அழைப்பார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

‘பாராளுமன்றம்: இந்திய உயர்நீதி மன்றமாகாது’

பிரதமர் நேரு விளக்கம்

புதுடில்லி, மே 15—

நாட்டின் பல்வேறு மாநிலங்களிலும் தடுப்புக்காவல் சட்டம் எப்படி வேலை செய்கிறது என்பது பற்றிய முழு விவரங்களையும், அச்சட்டத்தின் கீழ்த் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகைகளையும், அவற்றிற்குக் கொடுக்கப்பட்ட பதில்களையும் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்றும், அதனால் இச்சட்டம் பொது மக்களின் சுதந்திரத்தை எப்படிப் பாதிக்கின்றது என்று சபை அறிந்துகொள்ள இயலும் என்றும் பூபேஷ் குப்தா என்பவர் ராஜ்யங்கள் சபையில் கேட்டார்,

அப்போது இந்தியப் பிரதமர் பண்டித நேரு குறுக்கிட்டு, ‘பாராளுமன்றம், அப்பீல் செய்து கொள்வதற்குரிய இந்திய உயர்நீதி மன்றமாக, மாற்றப்பட மாட்டாது’ என்று குறிப்பிட்டார்.

‘இவ்வாறு கேட்பது வழக்கத்திற்கு மாறுபட்டது’ என்றும் அவர் குறிப்பிட்டார்.

மடகாஸ்கர் இந்தியர்கள் வெளியேற்றப்பட்டனர்

நாச வேலையில் ஈடுபட்டனராம்!

புதுடில்லி, மே 14—

புதுச்சேரி இந்தியாவில் சேர்ந்த பிறகு பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தின்கீழ் உள்ள மடகாஸ்கர் என்னும் தீவிலிருந்து ஐந்து இந்தியர்கள் வெளியேறும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளனராம்; இவர்கள் ஐவரும் சமுதாய நலனைப் பாதிக்கக்கூடிய நடவடிக்கைகளிலும் ‘கள்ளமார்க்கெட்’ வியாபாரத்திலும், அரசாங்க ஒப்புதல் பெறாத வியாபாரங்களிலும் ஈடுபட்டதாலேயே வெளியேறும்படி உத்தரவிடப்பட்டுள்ளனர் என்றும், மக்கள் சபையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், வெளிநாட்டு விவகார துணை மந்திரி தெரிவித்துள்ளார்

மொத்தம் 14,000 இந்தியர்கள் இருப்பதாகவும், அவர்களின் நலத்தைப் பாதுகாக்கவென இந்திய ஹைகமிஷனர் ஒருவர் உள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புரட்சிக் கூட்டத்தினர் கொல்லப்பட்டனர்

இராணுவத் தாக்குதலில் 300 பேர் பலியாயினர்

ஜாகர்தா, மே 16—

செலிபஸ் தீவின் தலைநகராகிய மக்காசரைக் கைப்பற்ற முயன்ற புரட்சிக் கூட்டத்தினரை இந்தோனேசிய இராணுவப் படை எதிர்த்துத் தாக்கியதில் 300 பேர் கொல்லப்பட்டனர். ரம்சான் நோன்பு முடிந்து ஈத் விழாவன்று மக்காசரைக் கைப்பற்றி விடுவதென்று புரட்சிக் கூட்டத்தினராகிய முஸ்லிம் வைதிகர்கள் திட்டமிட்டிருந்தனராம்.

கடைசி முகல் மன்னரின் எலும்புகள்

இந்தியாவுக்கு வருமா?

புதுடில்லி, மே 17—

1857-ல் நடந்த முதல் தேசியப் புரட்சியின் நூற்றாண்டு விழா, அடுத்த ஆண்டு கொண்டாடப்படவிருக்கிறது. அந்தத் தேசியப் புரட்சியின் தலைவராக இருந்த கடைசி முகல் மன்னரான பஹதூர் ஷா, வெள்ளையரால் பர்மாவில் சிறை வைக்கப்பட்டு, அங்கே காலஞ்சென்றார். அங்கே ஒரு தாகாவில் அவர் உடல் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. நூற்றாண்டு விழாவுக்கு முன்னதாக, பஹதூர் ஷாவின் எலும்புகள் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று மக்கள் சபையில் சிலர் கேட்டபோது, அதில் பல சங்கடங்கள் இருப்பதால் முடியாதென்று நேரு கூறிவிட்டார்.

ஆலோசிக்கிறார்களாம்!

புதுடில்லி, மே 15—

‘பிராவிடெண்ட்’ நிதி சட்டத்தைத் தோட்டத் தொழிலாளருக்கும் விரிவுபடுத்தும் வகை பற்றி அரசினர் ஆலோசித்து வருவதாகத் தொழிலாளர் இலாகா துணை அமைச்சர் அபீத் அலி மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

நூலுக்குள்ளேயேவர்ணம் சேர்த்த நைலான்

நூலுக்குள்ளேயே வர்ணம் சேர்த்த ஒருவகை நைலானை வாணிப முறையில் உற்பத்தி செய்யும் திட்டங்களை அமெரிக்கா நிறுவனமொன்று அறிவித்துள்ளது.

இப்பொழுது, உற்பத்தியாளர்கள் வெள்ளை நைலானை உற்பத்தி செய்து, பின்னால் நூலிலாவது துணியிலாவது சாயம் ஏற்றுகிறார்கள்; நூலுக்குள்ளேயே வர்ணத்தைச் சேர்ப்பதற்கு, நூற்கும் முன்னாலேயே நைலான் குழம்போடு வர்ணம் கலக்கப்படும்.

இந்தப் புதிய முறையில் சாயம் போவதில்லை; நூற்றபின் ஆலைகள் சாயம் ஏற்ற வேண்டிய அவசியம் இல்லை; இது ஒரு வேலைச் சிக்கனம். இவை அதன் அநுகூலங்கள்.

ஏற்க முடிவு!

கெய்ரோ, மே 16—

சீன மக்கள் குடியரசு (கம்யூனிஸ்டு) அரசினரை ஏற்க எகிப்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

****

தலைமைக் கழகம் : அறிக்கை—7/56

பொதுத் தேர்தல் குறித்து வாக்கெடுப்பு

பொதுத்தேர்தலில் தி. மு. கழகம் கலந்து கொண்டு போட்டியிட வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது குறித்து, மாநில மாநாட்டிற்கு வருகை தருவோரின் பொதுவான கருத்தை அறியும் வாக்கெடுப்பு முறை, 19—5—56 சனியன்று காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணிக்குள் நடைபெறும். நுழைவுச் சீட்டு உள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாக்குரிமைச் சீட்டு தரப்படும்.

தி. மு. கழகம்
பொதுத் தேர்தலில் போட்டியிட

வேண்டும்	
வேண்டாம்	

இப்படி அமையும் சீட்டில் அவரவர் விருப்பத்திற்கேற்ப எதிரிலுள்ள கட்டத்தில் X அடையாளம் இட வேண்டும்.

மாநாட்டுப் பந்தலில் தனியே வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் வாக்குரிமைச் சீட்டைப் போட வேண்டும்.

‘அறிவகம்,’
சென்னை—13
2-5-1956

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

****

மந்திரிகளின் மனைவியர் தேர்தல் பிரச்சாரத்தில் துணைபுரிய இயலுமா?

புதுடில்லி, மே 16—

மந்திரிகளின் மனைவிமார்கள், அவர்களின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் எந்த அளவுக்குத் துணை புரியலாம் என்ற கேள்வி மக்கள் சபையில் பொது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தைத் திருத்துவது குறித்துக் கொண்டு வரப்பட்ட மசோதாவின் மீது விவாதம் நடைபெறுகையில் எழுப்பப்பட்டது. ஆனால் இதற்குத் திருப்திகரமான விடை கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டனில் அட்லி பிரதமராக இருந்தபோது, அவர் தேர்தல் பிரச்சாரத்திற்குச் செல்கையில் அவருடைய மனைவி அவரது காரை ஓட்டிச் சென்றார் என்றும், அப்படிப்பட்ட வகையில் இங்கேயும் மந்திரிகளின் மனைவிமார்கள் உதவி செய்பவரென்றும் பொதுவுடைமை கட்சியைச்சார்ந்த பேராசிரியர் ஹிரேன் முகர்ஜி ஆலோசனை கூறினார்.

உடனே உதவி சபாநாயகர் திரு. சர்தார் ஹுக்கும் சிங் இங்குள்ள மந்திரிமார்களின் மனைவிமார்களுக்குக் கார் ஓட்டத் தெரியாமலிருக்கலாம் என்று குறிப்பிட்டார்.

அப்போது உள்நாட்டிலாகா துணை மந்திரி திரு. பி. என். தத்தார், ‘சில மந்திரிகளுக்கு மனைவிமார்களே கிடையாது’ என்றார்.

உடனே பண்டித நேருக்கு சந்திர சர்மா குறுக்கிட்டு, ‘அவர்களுக்கு வேகமாகக் கார் ஓட்டத் தெரியாமலிருக்கலாம்’ என்று கூறினார்.

கட்டாய வாக்களிப்புத் திட்டம் பலாத்காரமாகுமாம்!

புதுடில்லி, மே 16—

பாராளு மன்றத்திற்கும், சட்டசபைகளுக்கும் நடைபெறும் பொதுத் தேர்தல்களில் ‘கட்டாய வாக்களிப்புத் திட்டம்’ கொண்டு வரப்படுதல் வேண்டும் என்று, மக்கள் சபையில் பொதுமக்கள் பிரதிநிதித்துவத் திருத்த மசோதா குறித்து விவாதம் நடைபெறுகையில் சுயேச்சை உறுப்பினர் திரு. எஸ். எஸ். மூர் அவர்கள் ஆலோசனைக்கூறினார்.

வாக்களிக்குமாறு கட்டாயப்படுத்துவது பலாத்காரமாகுமென்று கூறி அவ்வாலோசனை மறுக்கப்பட்டது.

25 இலட்சம் ‘அம்பர் சர்க்கா’ விநியோகமாம்!

அனைத்திந்திய கதர், கிராமத் தொழில் ‘போர்டு’ 2-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 25 இலட்சம் அம்பர் சர்க்காக்களை நாட்டில் விநியோகிக்கத் தீர்மானித்துள்ளதாம்.

கைத்தறித் தொழிலின் தேவையை நிறைவேற்றும் பொருட்டு, திட்டக் கால இறுதிக்குள் ஆண்டிற்கு ரூ. 1½ கோடி பெறுமானமுள்ள நூல் உற்பத்தி செய்ய இயலுமெனக் கூறப்படுகிறது.

டோக்கியோ, மே 16—

ஜப்பானின் பல்வேறு [illegible] பெய்த மழை [illegible] யாளர்கள் பரிசோதித்து [illegible] கையில் அணுக்கதிர் [illegible] அளவில் [illegible] வத்தாம்.

****

தி. மு. கழக 2-வது மாநில மாநாடு

19, 20-5-56 நிகழ்ச்சிகள்:

19—5—56 சனி—காலை 9 மணி:

சிறப்புச் சொற்பொழிவுகள்:

1. ‘விடுதலைக் கிளர்ச்சிகள்’—கே. ஏ. மதியழகன் பி. ஏ.
2. ‘தொழிலியல் புரட்சி’—காஞ்சி-கல்யாணசுந்தரம்
3. ‘உரிமைக் கிளர்ச்சிகள்’—அருண்மொழி பி. ஒ. எல்.
4. ‘ஜனநாயகம்’—கி. மனோகரன் பி. ஏ. (ஆனர்ஸ்)
5. ‘கல்வித் திட்டம்’—வி. ஜி. இராசையா பி. ஏ. எல். டி.
6. ‘நாட்டுப் பணியில் மாணவர் பங்கு’—தில்லை-வில்லாளன்
7. ‘தமிழ் இலக்கியத்தில் அரசியல் கருத்துக்கள்’-க. அன்பழகன்
8. ‘தனி நாடு அமைப்பும் பொருளாதார வசதிகளும்’ —என். எஸ். இளங்கோ
9. ‘திராவிடத்தின் உலகத் தொடர்புகள்’—மு. கருணாநிதி

நண்பகல் 1-30—மாலை 3-30 இடைவேளை

10. ‘தாய்க்குல வரலாறு’—சத்தியவாணிமுத்து
11. ‘மொழிப் பிரச்சினைகள்’—கண்ணதாசன்
12. ‘கலையில் கருத்துப் புரட்சி’—சி. பி. சிற்றரசு
13. ‘தத்துவ வரலாறு’—டி. கே. சீனிவாசன்
14. ‘புத்தர் நெறி’—ஏ. வி. பி. ஆசைத்தம்பி
15. ‘உலகைத் திருத்திய உத்தமர்கள்’—அரங்கண்ணல்
16. ‘உலக அமைதி’—ப. உ. சண்முகம்
17. ‘மறைந்த இயக்க மாவீரர்கள்’—என். வி. நடராசன்
18. ‘இந்திய அரசியலில் கொள்கைக் குழப்பங்கள்’ —ஈ. வெ. கி. சம்பத்

இரவு 8-30—10-00 இடைவேளை

„ 10-00 ‘அட்வகேட் அமரன்’ நாடகம் —எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர்

20—5—56 ஞாயிறு:

காலை 7-30 } —பிரதிநிதிகள்
„ 8-30 } கூட்டம்

„ 9-00—தீர்மானங்கள் நிறைவேற்றல்

பகல் 1-30 | - இடைவேளை
மாலை 3-30 |

„ 3-30—தீர்மானங்கள் நிறைவேற்றல்

„ 6-00—அறிஞர் அண்ணா சிறப்புரை

இரவு 7-30 -தலைவர் முடிவுரை

„ 8-00—நன்றியுரை

8-30 | - இடைவேளை
10-00 |

„ 10-00— ‘சுமை தாங்கி’

நாடகம்: புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினர்

****

'காவலர்' தர, 'நாவலர்' கழகக் கொடி ஏற்றினர்

அதிர் வேட்டுகள் முழங்க இலட்சியக் கொடி 50 அடி உயரத்தில் பறந்தது

ஒலி பெருக்கி திராவிடப் பண் இசைத்தது— தோழர்களின் இலட்சிய முழக்கம் விண்ணதிர ஒலித்தது

1,000 'காமிரா'க்கள் நிகழ்ச்சிகளைப் படமெடுத்தன

நெஞ்சை அள்ளும் ஊர்வலச் சிறப்பு பற்றி விளக்கம்

வழியெல்லாம் மலர்களைத் தூவித் தலைவரை மக்கள் வரவேற்ற மாண்பு

பொலிவுடன் கைகூப்பி வணக்கமும் நன்றியும் செலுத்தினர் பொதுச்செயலாளர்

திருச்சி, மே 18—

திருச்சி இன்று காலை விழித்துக் கொண்டபோது, பெரும்வியப்பிற்குள்ளாகியது. நேற்றுவரை, திருச்சியில் நடைபெறப் போகும் கழக மாநில மாநாட்டைப்பற்றியே பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது. திருச்சிக்கு, தி. மு. கழக மாநில மாநாடு நடைபெறப் போவது நன்ருகத் தெரியும் என்ருலும், இத்தனைபெரும் மக்கள் வெள்ளப்பெருக்கத்தை, திருச்சி எதிர்பார்க்கவில்லை என்றே தோன்றிற்று.

வியப்பிற்குள்ளான திருச்சி, சிறிது சிறிதாகப் பெருமிதத்தால் சிரிக்கத் தொடங்கிற்று பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்குபெறும் ஒரு பெரும் மாநில மாநாடு, நம்மிடையே என்ற எண்ணம் தந்த பெருமிதம்தான் அது !

காலையில் திருச்சி வந்த இரயில் எதுவும், கோபப்படாமலிருக்க நியாயமில்லை—எத்தனை ஆயிரம் பேர்களைத்தான் நான், இப்படி ஒரே மூச்சில், இழுத்துவர முடியும் என்று அவற்றிற்கு வாயிருந்தால் கேட்டிருக்கக்கூடும் !

பலதிக்கிலிருந்தும் வந்த இரயில்களில் மட்டுமின்றி, தனி பஸ்கள், சைக்கிள்கள், மாட்டு வண்டிகள் முதலியவற்றிலுமாக, இலட்சக்கணக்கான மக்கள் திருச்சிக்கு வந்து சேர்ந்தனர்.

வெளியூர்களிலிருந்து வந்திருக்கும் சைக்கிள்களின் எண்ணிக்கை மட்டும் 75,000-க்கும் அதிகம் என்ருல் பார்த்துக் கொள்ளுங்களேன்!

நகரத்தில் மாநாட்டிற்கு வந்துள்ள பிரதிநிதிகள், கழகத்தோழர்கள் பொதுமக்கள் ஆகியோரின் நடமாட்டத்தினுல், சாதாரணமாகவே நெருக்கடிக்கு ஆளாகும் போக்குவரத்து, நிலைநின்றே போய்விட்டது !

நகர உணவு விடுதிகளில், உண்ணப் பொருள்கள் கிடைப்பதே அரிதாகிவிட்டது ! தங்குவதற்கு இடமோ, அதனினும் அரிதாகிவிட்டது !

வெயிலின் உக்கிரம் ஏறிக்கொண்டிருந்த நேரத்தில்—காலை 10-15 மணி அளவில், சிந்தாமணியிலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டது.

முதலில் அலங்கரிக்கப்பட்ட யானை ; அதன்பின், பலவகை மேளவாத்தியக் கோஷ்டிகள் !

பின்னர், கிளைக் கழகங்களிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள், கழகத் தோழர்கள் எல்லாம், மாவட்ட வாரியாக அணிவகுத்து நின்றிருந்தனர்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழகக் கிளைகள் பிரதிநிதிகளை, தங்கள் தங்கள் ஊர்ப் பெயர் பொறித்த கொடிகளுடன் அனுப்பி வைத்திருந்தன.

அந்தக் கொடிகளை உயர்த்திப் பிடித்தவண்ணம் நின்றிருந்த தோழர்கள், கடுமையான வெய்யிலினுல் பாதிக்கப்பட்டிருப்பதையும் மறந்து, உற்சாகம் பொங்க பொதுச்செயலாளரின் வருகைக்காகக் காத்திருந்தனர்.

தொண்டர்படைத் தலைவர் ஐ. எம். ஷெரீப் அவர்கள் குதிரை மீது ஏறிக்கொண்டு, இருந்த உடையில் காற்றெனப் பறந்து கடமையாற்றிக்கொண்டிருந்த தொண்டர்களுக்குத் தலைமை ஏற்றுப் பணிபுரிந்து கொண்டிருந்தார்.

கட்டுக்கடங்காத மக்கள் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தி, சீராக ஊர்வலத்தை நடத்துவதற்குப் பலரும் துணைபுரிந்து நின்றனர்.

மாநாட்டிற்காகவும், ஊர்வலத்திற்காகவும், திருச்சி நகரம் பூண்டிருந்த விழாக்கோலம் வர்ணித்து முடியாது.

காதலித்தவனைக் கைப்பிடிக்கப் போகும் மங்கை ஒருத்தி, திருமணத்தன்று, எவ்வகையில் எல்லாம் தன்னை அலங்கரித்துக் கொள்வாளோ, அதுபோல, திருச்சி நகரம் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தது.

வீதிகள்தோறும வரவேற்பு வளைவுகள் ! முன்னணி வீரர்களே, வருக ! வாழ்க, கழகக் காவலரே ! நாவலரே வருக, வருக ! வாழ்க ! ஒளிகாட்டி, வழி காட்டும் அண்ணுவே ! வருக ! வருக ! நாட்டு விடுதலைக்குப் போர் புரியும் கழகக் காளையரே வருக! வாழ்க! திராவிட நாடு திராவிடருக்கே ! அடைந்தே தீருவோம் திராவிடத்தை ! சமதாமம் காண்போம் ! ஜனநாயகம் வளர்ப்போம் ! சமத்துவ சமுதாயம் அமைப்போம் ! வடநாட்டு அடிமை விலங்கு ஒடிப்போம் ! வாழ வழிவகுப்போம !- என்ற இலட்சிய முழக்கங்கள் பொறிக்கப்பட்டிருந்தன — அந்த வரவேற்பு வளைவுகளில் !

வாழையும், பலாவும், தேங்காயும் காய்த்துத் தொங்கிக் கொண்டிருந்தன அந்த வளைவுகளில் ! தெருவில் கட்டப்பட்டிருந்த கழகக் கொடிகளாலான தோரணங்களுக்கு அளவே கிடையாது !

வெய்யிலின் கொடுமையால் உருகி இளகிப்போய் இருந்த தாரோடுகளின் கோபத்தைத தணிக்க வண்டி வண்டியாகத் தண்ணீர் ஊற்ற வேண்டியிருந்தது.

சரியாகக் காலை 10 பணியளவில், மாநாட்டுத் தலைவரான பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், ஊர்வலம புறப்படும் இடமான சிந்தாமணிக்கு வந்து சேர்ந்தார். அவருடன், மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவர் அம்பில் தருமலிங்கம், மாநாட்டுத் திறப்பாளர் ஜி. பி. சோமசுந்தரம், கண்காட்சித் திறப்பாளர் என். வி. நடராசன் முதலானேரும் வந்திருந்தனர்.

ஊர்வலம் புறப்பட்டது. திறந்த கார் ஒன்றில் பொதுச்செயலாளர் ஏறி நின்றதும், கூடியிருந்த பல்லாயிரவரும் பெரும் மகிழ்ச்சி ஆரவாரப் பேரொலி எழுப்பினர். மலர்களைத் தூவியும், மலர்மாலைகளை அணிவித்தும், தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

இருவண்ண உடையணிந்த தோழர்கள் முன் அணிவகுத்துச் செல்ல, திறந்த காரில் பவனி வந்தார் பொதுச் செயலாளர்.

வீதிகளிலும், வீடுகளிலும், அவற்றின் மொட்டை மாடிகளிலும் கூடிநின்றோர், வழிநெடுக மலர் இதழ்களைத் தூவி, கையொலி எழுப்பி ஆரவாரம் செய்தனர்.

பொதுச்செயலாளர், அந்தத் தோழர்களுக்கெல்லாம் கைகூப்பி வணக்கமும், நன்றியும், மகிழ்ச்சியும் தெரிவித்த காட்சிகள், சுலபத்தில் நெஞ்சை அள்ளிவிட்டன. அந்தக் காட்சிகளை மனக்கண்முன் கொண்டு வரும்போதெல்லாம் உள்ளத்தில் மகிழ்ச்சி பிறக்கிறது.

நேற்று வெளியிடப்பட்டிருந்ததே—ஊர்வலம், எந்தெந்த வீதிகள் வழியாகவெல்லாம், சென்று, வள்ளுவர் நகரை அடைந்தது என்பதை !

ஊர்வலத்தின் அளவையும், அழகையும், வீரர்கள் ஒலி முழக்கங்களுடன் அணிவகுத்துச் சென்ற கணகொள்ளாக் காட்சியையும் கண்ட பொதுமக்கள், வியந்து பாராட்டினர்—இத்தனை பெரிய அணிவகுப்பைத் திரட்டும் ஆற்றல், எப்படித்தான், கழகத்திடம் குவிந்திருக்கிறதோ, தெரியவில்லையே என்று !

திருச்சி நகரின் வரலாற்றில், இதுவரையில்—சமீப காலத்தில், இதுபோன்ற எல்லா வகையாலும் சிறப்பான ஒரு ஊர்வலம் நடைபெற்றதில்லை என்று, திருச்சி நகர மக்கள் வாயாரக் கூறியதை நான் காதாரக் கேட்க முடிந்தது.

விண்ணதிர இலட்சிய முழக்கம் செய்து வந்த தோழர்கள், வெய்யிலின் கடுமையால் தாக்கப்பட்டு, தாகத்தால் தவித்தபோது, ஆங்காங்கே வீடுகளில் நின்றுகொண்டிருந்த தாய்மார்கள் குடம் குடமாகத் தண்ணீர் தந்து, தாகம் தணித்தனர். தோழர்கள் எப்படித்தான் அந்தத் தாய்மார்களுக்கு நன்றி செலுத்த முடியும்—அந்தத் தாய்மார்களின் விடுதலைக்காக, மேலும் தீவிரமாகப் பாடுபடுவதைத் தவிர !

இத்தனை சீரும் சிறப்புடனும் நடைபெற்ற ஊர்வலம் வள்ளுவர் நகரை, அடைந்தபோது மணி பகல் 1 ஆகிவிட்டிருந்தது.

வள்ளுவர் நகரில், அண்ணு ஈ. வெ. கி. சம்பத், எம்.ஜி. இராமசந்திரன், முதலானேர ஊர்வலத்தை எதிர்பார்த்து கொளுத்தும் வெய்யிலில் காத்திருந்தனர்.

ஊர்வலம் வந்ததும், பொதுச்செயலாளரைக் கொடிக் கமபத்திற்கு அருகே அழைத்துவந்து, அவரைக் கொடி ஏறறச்செய்யும் வரை, தோழர்கள் எப்படி எல்லாம் நடந்து கொள்ளவேண்டும்—தொண்டர்களின் பணி என்ன என்பதை அண்ணு அவர்கள் விளக்கிச் சொல்லிக்கொண்டிருந்தார்.

தோழர் எம் ஜி. இராமச்சந்திரன், பொதுச்செயலாளர் கொடி ஏற்றும் மறக்கமுடியாத காட்சியை எப்படியும், பார்க்காது போய்விடுவோர் பார்த்துக் கொள்வதற்காகப் புகைப் படம் எடுத்துவிட வேண்டும் என்று துடித்து நின்றிருந்தார்

ஊர்வலம் 'வள்ளுவர் நகர்' வந்தது; காரிலிருந்து, இறங்கிய பொதுச்செயலாளரை வரவேற்புக் குழுத் தலைவரும், செயலாளர்களும, கொடிக் கம்பத்திற்கு அழைத்து வந்தனர்.

50 அடி உயரத்தில் அமைந்திருந்த கொடிக்கம்பத்தைச் சுற்றி, படிக்கட்டுகளான மேடையும், பூந்தொட்டிகளும் இடம் பெற்றிருந்தன. அலறறைச் சுற்றி, கழகம் காக்கும் தோழர்கள் பல்லாயிரக் கணக்கில் கூடி நின்றிருந்தனர்.

கோடிக் கம்ப மேடைக்கு வந்ததும், பொதுச்செயலாளருக்கு அண்ணு அவர்கள் மாலை அணிவித்து வரவேற்ருர். தோழர்கள் பெரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

பின்னர், கழகக் கோடியை அண்ணு அவர்கள் எடுத்துத் தர, பொதுச்செயலாளர் அவர்கள் ஏற்றிவைத்தார்.

கழகக் கோடி கம்பத்தில் ஏற்றப்படும்போது, பதினேரு அதிர் வேட்டுகள் வெடித்தன.

திராவிட நாட்டுப் பண் ஒலி பெருக்கி மூலம் ஒலிபரப்பப் பட்டது.

தோழர்கள், 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று உடலில் உள்ள சத்து அத்தனையையும் குரலில் ஏற்றி, வான் பிளக்க முழக்கமிட்டனர்.

பலர் மலர் இதழ்களைத் தூவி மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இந்தக் காட்சிகளை சுமார் 1,000 காமிராக்காரர்கள் படம் பிடித்துக் கொண்டனர்.

ஊர்வலம் நடைபெற்ற மூன்று மணி நேரமும், திருச்சி நகரின் முக்கிய வீதிகளில் எல்லாம் போக்குவரத்துகள் நிலை நின்று விட்டன என்பதும், மக்கள் கழகத்தின் வலிவையும், பொலிவையும், ஆற்றலையும், கண்ணியத்தையும், கடமை உணர்வையும, கண்டு வியந்து மகிழ்ந்து, வாய்விட்டுப் பாராட்டினர் என்பதும், குறிப்பிடத்தகுந்ததாகும்.

மாலை நிகழ்ச்சிகள் மாலை 4-45 - மணி அளவில் துவங்கி சிறப்புற நடைபெற்றன.

நன்மை தினை அளவு......

(-1ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றவர்கள் நம்மைப் பற்றி நினைத்தது ஒருபுறமிருக்க, நமக்குள்ளாக, நம்மைப் பற்றிய ஐயமும் அச்சமும் இருந்துவந்தது என்பதை நாம் மறக்க முடியாது. ஆனல் நம் எல்லோருடைய கூட்டு உழைப்பாலும், நல்ல வழிகாட்டியாக அமைந்து நம்மை முன்னின்று நடத்திச் சென்ற அறிஞர் அண்ணு அவர்களின் ஆழ்ந்த அறிவாற்றலாலும், இன்று, நம் இயக்கம் இந்நாட்டில் ஒரு பெரிய அரசியல் கட்சியாக வளர்ந்திருக்கிறது என்பதை நாம் பெருமையோடு சொல்லிக்கொள்ளலாம்.

(அவரது பேச்சு முடியவில்லை ; நாளை வெளிவரும்)

கண் காட்சித் திறப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் திரு என். வி. நடராசன் அவர்கள் ஓவியக் கண்கட்சியைத் திறந்து வைத்துப் பேசிய பின்னர், நடிப்பு இசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் இன்னிசை வழங்கினர்.

நம் கழகக் கருத்துரைகளையும், குறிக்கோள்களையும் தாங்கியபாடல்களை இசையோடு அமைத்துப் பாடுகையில் மக்கள் மெய்மறந்து இசை இன்பத்தில் ஆழ்ந்தனர்.

நாதசுர இசை :

பிறகு சுமார் 7-30 மணியளவில் இசைப் பெரும்புலவர் திருவாவடுதுறை இராசரத்தினம் அவர்கள் நாதசுர இசை வழங்கினர்.

அவர் நாதசுரத்தில் இசையைப் பொழிகையில் குழுமியிருந்த இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் எல்லாம் இசையுலகிலேயே 'உலா' வருவதாகக் கருதிப் பேருவகை யுற்றனர் எனக்கூறவும் வேண்டுமோ?

வில்லுப் பாட்டு :

சரியாக 8-30 மணிக்கு இசைப் பெரும் புலவரின் கானம் முடிவடைந்ததும், கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன் அவர்கள் புத்தர் வரலாற்றை 'வில்லுப்பாட்டி'ன் வாயிலாக மக்கட்கு உணர்த்தினர்.

நகைச்சுவையோடு கூடிய அவர் பேச்சும், பாடலும் குழுமியிருந்த மக்களை உவகைக் கடலில் ஆழ்த்திவிட்டன எனலாம்.

வயிறு வலிக்கச் சிரித்தோரும், மேலும் நகைக்க இயலவில்லையே எனபோரும், வெடிப்புச் சிரிப்பு சிரித்தோரும் எழுப்பிய சிரிப்பொலி, 'வள்ளுவர் நகர்' எங்கும் முழங்கியது.

மூதாட்டியாருக்கு விருது :

பின்னர், சரியாக 9-30 மணிக்கு நம் கழகக் காவலரும் பெருந்தகையாளருமான அண்ணு அவர்கள், 20-ம் நூற்ருண்டின ஒளவைப் பாட்டி என இயம்பதகும் மூதாட்டி இராமாமிர்தத்தம்மையாருக்கு தி. மு. கழகத்தின் முதல் விருதாகக் கேடயம் ஒன்றை அளித்துமூதாட்டியாரின் தொண்டு குறித்துப் பேசுகையில், அவரை அன்னிபெசண்ட் அம்மையாருக்கு ஒப்பிட்டுப் பேசினர். (முழுப்பேச்சும் பின்னர் வெளிவரும)

பின்னர் அம்மையார், தமக்குச் செய்த சிறப்புக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் நமது இலட்சியங்களையும் கடமைகளையும் குறிப்பிட்டுப் பேசினர்.

இடைவேளைக்குப் பின்னர், இரவு 11-மணிக்கு மேல் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினரால் 'புதுவெள்ளம்' என்னும நாடகம் நடைபெற்றது. கண்ணுக்கும்—கருத்துக்கும் பெருவிருந்தாக இருந்த அந்த நாடகத்தை மாநாட்டிற்கு வந்த மக்கள் அனைவரும் கண்டு களிபேருவகை எய்தினர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

வடசென்னை குறள் நெறிக் கழகச் சொற்பயிற்சிக் கூட்டம் 19—5—56 மாலை 6-30 மணியளவில் தோழர் மு. போ. வீரன் தலைமையில் நடைபெறும். 'புத்தர் நெறி' என்ற பொருள் பற்றித் தோழர்கள் பலர் பேசுவர்.

திருவள்ளுவர் முன்னணிக் கழகம்

19-5-56 இரவு 7-30 மணிக்கு, சென்னை — கொருக்கையம்பதி, நாகப்ப நாயகன் தெரு, எண். 15 கழகப் பணி மனையில் தோழர் அ. நபிதாசன் தலைமையில் 'தி. மு. க. - வும் — அரசியலும்' என்னும் பொருள்பற்றி சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா நெடுஞ்செழியன் எம். ஏ.